DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **S.C.No. 24 of 2024** |
| **Deposition of witness for** | **:** | **PW- 1** |
| **Name** | **:** | சதாம்உசேன் |
| **Father's/Husband Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Address** | **:** | |
| **Village** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**19.11.2025**

**முதல் விசாரணை :**

நான் தற்போது உதகை ஊரக காவல் நிலையத்தில் 2ஆம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரி ராஜேந்திரனை தெரியும். கடந்த 17.9.2023ஆம் தேதி உதகை ஊரக காவல் நிலைய உதவி ஆய்வாளர் வெங்கடேஷ்வரனும், நானும், காவலர் 2449 சேதுலிங்கம் ஆகியோரும் உதகை ஊரக காவல் நிலைய எல்லைக்குட்பட்ட நுந்தளா, காத்தாடிமட்டம் ஆகிய இடங்களில் போதை பொருள், மதுவிலக்கு, சூதாட்டம் சம்பந்தமாக கண்காணித்து வந்தபோது அன்று 12.30 மணிக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் அன்று 13.00 மணிக்கு

தேவர்சோலை பஜாரில் உள்ள SRG டீ கடையில் போதை பொருள் விற்பதாக கிடைத்த தகவலின் பேரில் அங்கு சென்று விசாரித்தபோது அந்த கடையின் உரிமையாளர் தனது பெயர் ராஜேந்திரன், வயது 56, த/பெ. ரங்கையன், தேவர்சோலை என்று கூறினார், நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கும் எதிரி ராஜேந்திரன்தான் அந்த ராஜேந்திரன் ஆகும்.

எதிரி ராஜேந்திரன் கொடுத்த தகவலின் பேரில் எதிரியின் கடையில் இருந்து 150 பாக்கட் Hans, 600 பாக்கட் விமல் பான்மசலா, 600 பாக்கட் V1 Tobacco ஆக மொத்தம் மேற்கூறிய 1350 பாக்கட்டுகளை உதவி ஆய்வாளர் வெங்கடேசன் அன்று 13.20 மணிக்கு கைப்பற்றுதல் மகசரின் கீழ் கைப்பற்றினார், அந்த கைப்பற்றுதல் மகசர்தான் Exhibit P1. அதில் நானும், காவலர் 2449 சேதுலிங்கமும் சாட்சிகளாக கையொப்பம் இட்டுள்ளோம். அப்படி கைப்பற்றப்பட்ட 150 Hans பாக்கட்களில் 145 Hans பாக்கட்கள் பிரிக்கப்படாமலும், 5 Hans பாக்கட்கள் பிரிக்கப்பட்டும் இருந்தன, அவ்வாறு பிரிக்கப்பட்டிருந்த 5 Hans பாக்கட்களில் ஒரு விஷ வாடை வீசியது, அந்த பிரிக்கப்படாத 145 Hans பாக்கட்களில் ஒரு பிரிக்கப்படாத Hans பாக்கட்டை எடுத்து, பிரிக்கப்பட்டிருந்த 5 Hans பாக்கட்களில் ஒரு பிரிக்கப்பட்ட Hans பாக்கட்டோடு ஒப்பிட்டு பார்த்தபோது நிற வேற்றுமை இருந்தது. கைப்பற்றப்பட்ட 600 பாக்கட் விமல் பான்மசலா, 600 பாக்கட் V1 Tobacco ஆகியவை பிரிக்கப்படாமல்தான் இருந்தன.

நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பிரிக்கப்படாத 145 Hans பாக்கட்டுகளையும், பிரிக்கப்பட்ட 5 Hans பாக்கட்டுகளையும், பிரிக்கப்படாத 600 விமல் பான்மசலா பாக்கட்டுகளையும், பிரிக்கப்படாத 600 V1 Tobacco பாக்கட்டுகளையும் தான் உதவி ஆய்வாளர் வெங்கடேஷ்வரன் Exhibit P1 கைப்பற்றுதல் மகசரின் கீழ் கைப்பற்றினார்.

இந்த பிரிக்கப்படாத 145 Hans பாக்கட்டுகள் தான் M.O.1 வரிசை, பிரிக்கப்பட்ட 5 Hans பாக்கட்டுகள் தான் M.O.2 வரிசை, பிரிக்கப்படாத 600 விமல் பான்மசலா பாக்கட்டுகள் தான் M.O.3 வரிசை, பிரிக்கப்படாத 600 V1 Tobacco பாக்கட்டுகள் தான் M.O.4 வரிசை ஆகும். எதிரி அன்று 13.15 மணிக்கு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், காவலர் 2449 சேதுலிங்கமும் சாட்சிகளாக கையொப்பம் போட்டோம். எதிரி ராஜேந்திரன் மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களோடு அன்று 14.00 மணிக்கு உதகை ஊரக காவல் நிலையத்திற்கு வந்தோம். உதவி ஆய்வாளர் பிரிக்கப்பட்ட 5 Hans பாக்கட்டுகளை ரசாயன பரிசோதணைக்காக SHO Seal வைத்து கோயமுத்தூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தார். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார், நான் நடந்ததை கூறினேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>:

சம்பவத்தன்று ரோந்து பணிக்கு செல்வதற்கு எனக்கு உதவி ஆய்வாளர்தான் அதிகாரம் கொடுத்தார். பொதுவாக காவல் நிலைய

ஆய்வாளர்தான் எந்தெந்த காவலர் எங்கெங்கு பணியில் இருக்க வேண்டும் என்று அவர்களுக்கு அதிகாரம் கொடுப்பார் என்று சொன்னால், ஆமாம். தேவர்சோலை பஜார் கடைகள், பஸ் ஸ்டாப் இருக்கும் கூட்ட நெரிசலான பகுதி என்று சொன்னால், ஆமாம். ஆஜர் எதிரியின் கடை மக்கள் டீ குடித்துக்கொண்டிருந்த கடை என்று சொன்னால், ஆமாம். சம்பவத்தின்போது எதிரி கடையில் மக்கள் இருந்தார்கள் என்று சொன்னால், ஆமாம். எங்களுக்கு ரகசிய தகவல் கிடைத்போது நாங்கள் எங்கிருந்தோம் என்று கேட்டால், நுந்தளாவில் இருந்தோம். நுந்தளாவில் இருந்து சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு 10 நிமிடத்தில் போய் விடலாம் என்று சொன்னால், ஆமாம். உதவி ஆய்வாளருக்குதான் ரகசிய தகவல் வந்தது, அதை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. உதவி ஆய்வாளருக்கு ரகசிய தகவல் கிடைத்தபோது அவருடன் நானும், காவலர் சேதுலிங்கமும் இருந்தோம்.

ஆஜர் எதிரி ராஜேந்திரன் கடையில் யார்யார் சோதனை செய்தோம் என்று கேட்டால், உதவி ஆய்வாளர் வெங்கடேஷ்வரனும், காவலர் சேதுலிங்கமும், நானும் சோதனை செய்தோம். எந்தெந்த பைகளில் இருந்து எந்தெந்த பொருட்களை கைப்பற்றினோம், அந்த பைகளின் நிறம் என்ன என்று கேட்டால், கைப்பற்றப்பட்ட பொருட்களை எதிரி ஒரு Boxல் வெளிப்படையாக வைத்திருந்தார். அந்த Boxஐ உதவி ஆய்வாளர் கைப்பற்றினாரா என்று கேட்டால், இல்லை. உண்மையில் நாங்கள் பொருட்களை

எதிரி கடையில் இருந்து கைப்பற்றியிருந்தால், அந்த Boxஉடன் கைப்பற்றியிருப்போம் என்றும், நான் சொன்னதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்று சொன்னால், சரியில்லை. நான் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் இருந்து சொன்ன நேரத்தில் எந்த பொருட்களையும் கைப்பற்றவில்லை என்றும், எதிரியிடம் இருந்து பொருட்களை கைப்பற்றியதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியில்லை.

நான் முதல் விசாரணையில் அந்த பிரிக்கப்படாத 145 Hans பாக்கட்களில் ஒரு பிரிக்கப்படாத Hans பாக்கட்டை எடுத்து, பிரிக்கப்பட்டிருந்த 5 Hans பாக்கட்களில் ஒரு பிரிக்கப்பட்ட Hans பாக்கட்டோடு ஒப்பிட்டு பார்த்தபோது நிற வேற்றுமை இருந்தது என்று கூறியுள்ளதை உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தபோது கூறியுள்ளேனா என்று கேட்டால், கூறியுள்ளேன். உதவி ஆய்வாளர் சம்பவ இடம் குறித்து வரைபடம் வரையவில்லை. நான் சொன்னதுபோல் உண்மையில் சம்பவம் நடந்திருந்தால், சரியாக சம்பவம் இடம் குறித்து வரைபடம் வரைந்திருப்போம் என்றும், எனவே நான் சொன்னதுபோல் சம்பவம் நடக்கவில்லை என்று சொன்னால், சம்பவம் நடந்தது உண்மைதான். ஆஜர் எதிரியை கைது செய்தபிறகு அவரை அன்று 14.00 மணிக்கு காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றோம்.

ஆஜர் எதிரியின் கடையில் இருந்து நாங்கள் எந்த பொருட்களையும் கைப்பற்றவில்லை என்றும், ஆஜர் எதிரி மீது பொய்யாக வழக்கு போடப்பட்டுள்ளது என்றும், நான் அந்த வழக்கிற்கு ஆதரவாக உயர் அதிகாரியின் உத்தரவின் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியில்லை. வழக்கின் ஆவணங்கள் அனைத்தையும் உயர் அதிகாரிகள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து எதிரி மீது புள்ளி விவரத்திற்காக பொய்யாக இந்த வழக்கை போட்டுள்ளார்கள் என்றும், நான் அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியில்லை. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால், சரியில்லை.

N. MURALIDHARAN

Digitally signed by N. MURALIDHARAN
Date: 2025.11.19 13:03:15 +0530